புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கீழவெண்மணி படுகொலைகள் குறித்த கவிதைகளில் ஆதிக்க வன்முறைகள்

முனைவர் செ. ஷப்ரீன் முனீர்
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம், திருநெல்வேலி.

ஆய்வுச்சுருக்கம்

ஒடுக்கப்பட்ட ஒன்று தான் வீரியத்தடன் வெளிக்கிளம்பும். பன்னெடுங்காலமாக அடக்கப்பட்டுக் கிடந்த உணர்வுகளும், ஒடுக்கப்பட்டுக் கிடந்த வலிகளும் இலக்கியங்களாக ஆக்கம் பெறுகின்றன. தலித்தியக் கவிதைகளில் ஆசிரியரின் குரல் ஒரு தனிமனிதக் குரலாக இல்லாமல் ஒரு இனக்குழுவின் கூட்டுக் குரலாகவே ஒலிக்கிறது என்ற உண்மை விளங்குகிறது. தொன்மங்களும், இனக்குழு வழக்காறுகளும், அமங்கல இடக்கரடக்கல்களும் இணைந்த மையப்படுத்தப்பட்ட செவ்வியல் மொழிக்கு எதிரான, அமானுட மொழி அமைப்பொன்றை தலித்தியக் கவிஞர்கள், கவிதைகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். தலித் படைப்பு மொழி இன்று கவனிப்புக்கும், மீளாய்வுக்கும் உள்ளாக்கப்பட வேண்டும். தலித்திய மொழி உணர்வும், உயிர்த் தன்மையும் கொண்ட மொழியாக மாற வேண்டும் என்ற கருத்துக்கள் கவிஞர்கள் மூலம் எடுத்துரைக்கப்படுகின்றன. இவ்வாய்வு தலித் சொல்லாடல், தலித்தியக் கவிதைகள், கீழவெண்மணி படுகொலைகள், சாதீ, வெண்மணியும் நெல்மணியும், இதுவரை அம்முறை இனிமேல் நம்முறை, முடிவுரை போன்ற தலைப்புகளின் கீழ் விளக்கப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்

கீழவெண்மணி, தலித்தியம், கவிதைகள், ஆதிக்கம், வன்முறைகள்

## முன்னுரை

தமிழகத்தில் தலித் மக்களின் மீது ஆதிக்க சாதியினர் நிகழ்த்திய வன்முறை தாக்குதலான கீழவெண்மணி படுகொலைகள் குறித்த கவிதைகளை ஆய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த நிகழ்வின் தாக்கம் கவிஞர்களின் கவிதைகளில் வெளிப்படும் பாங்கினை புலப்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## தலித் சொல்லாடல்

தலித் என்ற சொல்லுக்கு பல்வேறு கருத்துகளை அறிஞர்கள் கூறுகின்றனர்.

“தலித் என்ற சொல்லை முதன் முதலில் கையாண்ட ஜோதிபால் பூலே, அதற்குப் ‘புறச் சாதியினர்’ என பொருள் தந்தார். 1950இல் தலித் என்ற சொல் புத்த மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டோரை குறித்தது. 1970இல் இருந்துதான் தலித் என்ற சொல் மராட்டியத்திலும் 1990க்கு பிறகு இந்தியாவின் பிற பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டது”[1]

தலித் என்ற சொல் பற்றி கெய்ல் ஓம் வெல்த் அவர்கள் “தாழ்த்தப்பட்டவர்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், மதத்தின் பெயரால் சுரண்டப்படும் அனைவருமே தலித்துகள் தான்”[2] என்கிறார். “தலித் என்ற சொல் ஒரு சாதியை குறிக்கின்ற ஒன்றாக சுருங்கி விடக்கூடாது. அது வேதனையின் குறியீடாக இருக்க வேண்டுமே தவிர சுரண்டலின் குறியீடாக ஆகிவிடக்கூடாது. சுரண்டல், கொடுமை, அக்கிரமங்களை எதிர்க்கின்ற குறியீடாக மலர வேண்டுமே தவிர, சுரண்டலின் குறியீடாக ஆகிவிடக்கூடாது. அவமானம், பாதுகாப்பின்மை, எதிர்ப்பு ஆகிய பொருள்களை

*தலித் என்ற சொல் தர வேண்டும்."[3] என்கிறார் சித்தலிங்கய்யா. "தலித் என்ற மராத்தி சொல் குழியல் விழுந்தவன் என்ற பொருள் தருவதாகக் கூறுகிறார்"[4] டாக்டர் தே. ஞானசேகரன்.*

*"பிராமணர்களுக்கு எதிராக இந்நாட்டின் பிற்படுத்தப்பட்ட மக்கள் தீண்டப்படாதார் மற்றும் பெண்கள் ஆகியோர் அடிமை தலையிலிருந்து விடுபட்டு தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வழி வகுக்க வேண்டும் என்று 100 வருடங்களுக்கு முன்பு குரல் கொடுத்தார் ஜோதிராவ் பூலே",[5] என்பார் அர்ஜூன் டாங்ளே. இதை ஒரு படி மேலெடுத்து சென்று செழுமைப்படுத்தியவர் டாக்டர் அம்பேத்கர். இவரின் தத்துவ பின்னணியில் இருக்கும் பம்பாயில் தோன்றிய தலித் இயக்கம் தன் அறிக்கையில், வர்க்கச் சாதி அமைப்பை தகர்த்தெரியப் போராடும் புரட்சிகர கட்சிகள் உண்மையிலேயே இடதுசாரித்தன்மை கொண்ட இடதுசாரிக் கட்சிகள், பொருளாதார அரசியல் ஒழுக்கமுறையில் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தின் அனைத்துத் தர மக்களும் நமது நண்பர்கள் என்று வெளியிட்டது. எனவே, தலித் என்ற கருத்துருவாக்கம் குறிப்பிட்ட சாதி அல்ல என்று அர்த்தப்படுத்துவதோடு சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட வஞ்சிக்கப்பட்ட என்ற பொருள்களோடு, உரிமைகள் மறுக்கப்பட்டு, மனிதராக மதிப்பு பெறாத அவல நிலையில் உள்ளோரைக் குறிக்கும் ஒரு சொல்லைத்தான் குறித்தது என்று கருதலாம். தலித் என்ற சொல் தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிக்கின்ற பொதுச் சொல்லாக இன்று அறியப்பட்டிருக்கிறது. "தலித் என்று சொல்வது தவறில்லை. தலித்துகள் என்று சொல்வது தான் தவறு. அது ஆடுகள், மாடுகள் போன்று அஃறிணை போல் பயன்படுத்தப்படுகிறது. அதனால் தலித் மக்கள் என்று சொல்வதே மரியாதைக்குரியதாக இருக்கும்"[6] என்ற மதிமாறனின் கருத்தும் கவனிக்கத்தக்கது.*

*தலித்தியக் கவிதைகள்*

*தலித் மக்கள் தங்கள் வாழ்க்கையின் பொருட்டு எதிர்கொள்ளும் அவலங்களையும், மகிழ்ச்சியையும், ஆதிக்க சாதியினருடன் சில இடங்களில் முரண்பட்டு நிற்கும் நிகழ்வுகளையும் வெளிக்கொண்டு வருபவையாக தலித்தியக் கவிதைகள் விளங்குகின்றன. மேலும், எல்லா வகையான சுரண்டல்களில் இருந்தும் சாதிய ஒடுக்கு முறைகளில் இருந்தும் தலித் மக்கள் விடுதலை பெற வேண்டும் என்ற கருத்தையும் இக்கவிதைகள் முன்வைக்கின்றன.*

*தலித்தியக் கவிதைகள் கவிஞர்களின் படைப்புலகத்தையும், படைப்புகளின் தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. தலித்தியப் படைப்பாளர்கள் தங்கள் படைப்புகளில் சாதிய ஒடுக்குமுறையின் சகல பரிமாணங்களையும் தோலுரித்துக் காட்டுகின்றனர். ஆதிக்க கருவிகளான மதம், சாதி, ஆணாதிக்கம், பொருளாதாரம் ஆகியவையால் வேரறுக்கப்பட்டோரின் வாழ்வியல் அவலங்களை அனைத்துக் கூறுகளுடன் தனது எழுத்துக்களில் பதிவு செய்து வருகின்றனர். பிரச்சனைகளை சுட்டிக்காட்டுவதுடன் சில சூழல்களில் மாற்றங்களுடன் தீர்வுகளை முன் வைப்பதாகவும் தலித்தியக் கவிதைகள் அமைந்துள்ளன. வாழ்வனுபவங்களே படைப்புகளாக வெளிப்படுகின்றன என்றுரைக்கும் தலித் இயக்கக் கவிஞர்கள் நேரிலும், அனுபவத்திலும் தான் கண்ட, உணர்ந்த தலித் அவலங்களைப் பதிவு செய்துள்ளனர்.*

*சாதி அமைப்பின் மையம் தான் படிநிலை கோட்பாடு. இது தூய்மை முதல் தீட்டு ஈறான வரிசை அமைப்பில் ஒவ்வொரு சாதியையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிறுத்துகிறது. இப்படியான நிலை அமைப்பு சாதி அமைப்பின் பண்புகள் குறித்த செய்திகளை தலித்தியக் கவிதைகள் வெளிச்சப்படுத்துகின்றன. தலித் பெண்ணியத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கவிதைகள் தலிப் பெண்கள் அடையும் இன்னல்களையும், போராட்டங்களையும் முதன்மைப்படுத்துகின்றன. தலித் பெண்களின் அவலங்கள், அழுகுரல்கள் மட்டுமின்றி அவர்களின் கலகலப்பும், கலகமும் கொண்ட பண்பாடு, யதார்த்த வாழ்க்கையில் சிக்கிச் சின்னாபின்னமாய் போய்விடாமல் எதிர்நீச்சல் போட்டு வாழும் துடிப்பு, பிரச்சனைகளால் அமுக்கப்படும் போது, நகைச்சுவையும், நையாண்டித்தனமுங் கொண்டு பிரச்சனைகளை அமுக்கி விட்டு வாழும் தன்னம்பிக்கை, தன்மானம், வாழ்க்கையை உயிரோடத்துடன், உண்மையுடன், உல்லாசத்துடனும் வாழ வேண்டும் என்ற வேட்கையை உண்டாக்குகிறது.*

*கீழவெண்மணி படுகொலைகள்*

*இன்றைய நாகப்பட்டினம் மாவட்டம், நேற்றைய கிழக்குத் தஞ்சை ஆக இருந்தது. அதில் நாகப்பட்டினம் ஒரு வட்டாட்சியாக நிர்வாகிக்கப்பட்டது. அதற்கு உட்பட்ட கிராமம்தான்*

*கீழவெண்மணி கிராமம். கீழத் தஞ்சை முழுவதுமே, பெருவாரியான மக்களாக இருக்கும் தலித் மக்கள், கூலி ஏழை விவசாயிகளாக இருந்து வருகிறார்கள். அவர்கள் மத்தியில் பொதுவுடமைக் கட்சி ஆண்டு பலவாக சங்கம் அமைத்துப் போராடி வருகிறது. ஆரம்பத்தில் அவர்கள் உழுபவனுக்கே நிலம் என்ற முழக்கத்தை முன்வைத்துப் போராடி வந்தார்கள். அப்போதும் ஆதிக்க சாதி பண்ணையார்கள், தலித் கூலி மக்களைச் சாணிப் பால் கொண்டும், சவுக்கடி கொண்டும் அடித்து வந்தார்கள். அதை எதிர்த்துத் தான் பொதுவுடமை கட்சித் தலைவர் சீனிவாச ராவ் தலைமையில் கூலி விவசாயிகள் சங்கங்கள் அமைத்துப் போராடி வந்தார்கள். சாணிப் பாலும், சவுக்கடியும் பொதுவுடமைக் கட்சியினரால் கடுமையான போராட்டங்களின் மூலம் எதிர்க்கப்பட்டது.*

*இக்காலகட்டத்தில் 1967 டிசம்பர் 25ஆம் நாள் கீழவெண்மணி கிராமத்தில் அந்த கொடூரச் சம்பவம் நடந்தேறியது. கூலி உயர்வு போராட்டத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும் பொதுவுடமைக் கட்சி, அந்த தலித் கூலி மக்களைத் திரட்டிப் போராடி வந்தது. கீழத் தஞ்சையில் குறிப்பாக நாகப்பட்டினம் வட்டாரத்தில், நெல் உற்பத்தியாளர் சங்கம் என்ற பெயரில், ஆதிக்கச் சாதி பண்ணையார்கள் உருவாக்கிய அமைப்பிற்குக் கோபாலகிருஷ்ண நாயுடு தலைவராக இருந்தார். அவர்தான் அந்த வட்டாரத்தின் கூலிப் போராட்டத்தை ஒடுக்குவதில் பெயர் பெற்றவர். அரைப்படி நெல்லை உயர்த்தி கேட்டதற்காகக் கூலி விவசாயிகள் அங்கே ஒடுக்கப்பட்டார்கள். அறுவடைக்கூலியாக காசுக்குப் பதில், நெல் கொடுப்பதுதான் அங்கே இருந்து வந்த நடைமுறையாகும். உச்சகட்டத்திற்கு போராட்டம் சென்றபோது, பண்ணையார் கோபாலகிருஷ்ணன், காவல் துறையினருடன் சேர்ந்து கொண்டு, கீழவெண்மணி கிராமத்து போராடும் மக்களை ஒடுக்குவதற்காக உள்ளே நுழைகிறார். தேவேந்திர குல வேளாளர்கள் என்று அழைக்கப்படும் தலித் மக்கள், அந்த கிராமத்தின் ஒரு பகுதியில் வசித்து வருகின்றனர்.*

*கூலி உயர்வு போராட்டத்தில் முன்னணி பாத்திரம் வகித்ததாக அந்த மக்கள் மீது ஆதிக்க சாதி பண்ணையார் ஆத்திரம் கொள்கிறார். தன்னுடன் வந்த குண்டர் படையினைக் கிராமத்து மக்கள் மீது ஏவி விடுகிறார். ஆடிக்குப் பயந்து ஓடிய மக்களில் ஒரு சிலர், ஒரே குடிசைக்குள் புகுந்து ஒளிந்து கொள்கின்றனர். அவர்களை அப்படியே அந்தக் குடிசையோடு பூட்டி, பண்ணையார் கட்டளைப்படி குண்டர்கள் குடிசைக்குத் தீ வைத்துக் கொளுத்துகிறார்கள். கொளுத்தப்பட்ட குடிசைக்குள் இருந்த தலித் கூலி விவசாயிகளில், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடக்கம். அனைவரும் அந்தப் பெருந்தீயில் வெந்து மடிகிறார்கள். 44 பேர் அன்று நெருப்பில் கொல்லப்பட்டார்கள். உலகின் மனசாட்சிக்கு, நெஞ்சமே வெடித்தது. கூலி உயர்வு போராட்டத்திற்குத் தலைமை வகித்து வந்த பொதுவுடமைக் கட்சி அதிர்ச்சியடைந்தது.*

*இது நடந்தது 1968 ஆம் ஆண்டு. அதே நேரத்தில் சி.பி.எம். கட்சியில் அரசியல் தலைமைக் குழு கூட்டம் கேரளாவில் நடந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்த பி.டி.ரணதிவே, ஜோதிபாசு, பி.ராமமூர்த்தி ஆகியோர் வெண்மணிக்கு வந்தனர். நடந்து முடிந்த கோர தாண்டவக் கொலையைக் கண்டு பொறுக்காத ஒரு லட்சம் வரையிலான கூலி விவசாயிகள் அணி திரண்டு பண்ணை ஆதிக்கச் சக்தியை, பழிவாங்க வேண்டும் என்ற துடிப்பில் இருந்தது. அங்கே கோபாவேசத்தோடு பேசிய பி.ராமமூர்த்தி தனது நீண்ட உரையின் மூலம் பண்ணையாளர்களின் கொடூரங்களை அம்பலப்படுத்தினார். அவர்களது செயல்கள் சட்டவிரோதமானவை என்பதை ஆணித்தரமாக மக்கள் மத்தியில் எடுத்துரைத்தார். கோபாவேசத்தில் பண்ணையாரை பழி தீர்த்து விட்டால் பிரச்சனை தீர்ந்துவிடுமா? என்ற கேள்வியைக் கேட்டு மக்களைச் சிந்திக்க வைத்தார்.*

*சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து, நீதிமன்றத்தின் மூலம் பண்ணையாருக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கோபாவேசத்துடன் பேசினார். தலித் கூலி மக்களும் உணர்ச்சிகளைத் தலை கவிழ வைத்தனர். அன்றைக்கு அந்தப் பண்ணையார் தப்பிவிட்டார். வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. உச்ச நீதிமன்றம் இதனைப் பெரிய பண்ணையார், காவல்துறையுடன் சேர்ந்து கொண்டு தலித் கிராமத்துக்குள் நுழைந்து குடிசைக்கு நெருப்பிடுவார் என்பதை நம்ப முடியவில்லை என்று விளக்கம் கொடுத்துப் பண்ணையாரை விடுவித்தது. ஆனால் பண்ணையார் விடுதலை ஆகி 12 ஆண்டுகளுக்கு பின்பு வெட்டிக் கொல்லப்பட்டார். இப்படுபாதகச் செயலின் தாக்கம் இலக்கியத்தில் பிரதிபலித்தது.*

*சாதீ*

*“மாயவன் செய்த*<br>
*மண்பாண்டங்கள்*

*வேக்காடு*
*போதவில்லை என்றா*
*கீழவெண்மணிச் சூலையில்*
*மீண்டும் போட்டு*
*சுட்டார்கள்?'' (சந்திர சேகரன் (தொ.ஆ), தலித்தியக் கவிதைகள் ப.36)*

*எங்களை மனிதர்களாகக் கூட மதிப்பதில்லை. பாண்டங்களாக நினைத்து மீண்டும் மீண்டும் சுடுகிறார்கள் என்ற கருத்தை இக்கவிதை மூலம் பதிவு செய்கிறார் கவிஞர். இவ்வுணர்வு ஹைக்கூ கவிதை வடிவத்திலும் வெளிப்படுகிறது.*

*''எரிந்து சாம்பலானது*
*சேரியின் குடிசைகள்*
*சாதீ'' (சந்திர சேகரன் (தொ.ஆ), தலித்தியக் கவிதைகள் ப.52)*

*சாதீ என்று சாதிக்கு தீப்பிடித்த நிலையை கூறி 'வெண்மணி' என்று இக் கவிதைக்குத் தலைப்பிடுகிறார் கவிஞர்.*

*நெல்மணியும் வெண்மணியும்*

*நெல்மணிகளை விளைய வைத்தவர்கள் கூலி உயர்வு கேட்டதால் நடந்த சாதிய வெறியாட்டமே வெண்மணி நிகழ்வு என்பதை,*

*''எங்கள் இரத்த*
*உரத்தில்*
*மலர்ந்த நெல்மணிகள்*
*இதைப் பறிப்பதை*
*எதிர்த்தால்*
*எத்தனை வெண்மணிகள்'' (சந்திர சேகரன் (தொ.ஆ), தலித்தியக் கவிதைகள் ப.62)*

*என்று கூறுவதன் மூலம் உழைக்கும் உழைப்பாளிகள் எங்கெல்லாம் உரிமை பற்றிப் பேசுகிறார்களோ அங்கெல்லாம் வெண்மணி போன்ற நிகழ்வுகள் அரங்கேற்றப்படுகின்றன. ஆனால் அது உலகத்தின் பார்வைக்குப் பெரும்பான்மையும் வருவதில்லை என்ற கருத்தை கூறுகின்றனர். உரிமை கேட்டார்கள் எரிக்கப்பட்டார்கள். ஆனால் எத்தனை காலம் அவர்கள் ஒடுக்கப்படுவார்கள் என எதிர்ப்புணர்வு காட்டும் கவிதை இது.*

*''கீழவெண்மணியில்*
*சண்டாளர்கள்*
*மூட்டிய தீ*
*என் நெஞ்சையும்*
*பற்றிக் கொண்டது*
*இனி எங்களால்*
*யுகப் பிரளயம் வந்துதான்*
*அணைய வேண்டுமோ'' (சந்திர சேகரன் (தொ.ஆ), தலித்தியக் கவிதைகள் ப.23)*

*எத்தனை காலம் தான் எரிவது? இனி எங்களால் யுகப் பிரளயம் வரும் என்று எச்சரிக்கை விடுக்கிறார் கவிஞர்.*

*இதுவரை அம்முறை இனிமேல் நம்முறை*

*மனித இனம் மானுட நேயத்தோடு அணுகப்பட வேண்டும் என்ற சோதனை முயற்சி தலித் கவிதைகளில் வலிமையாகச் சொல்லப்படுகிறது. நவீனக் கவிதைகளில் சமூகச் செயல்பாடு என்பது சமூகத்தில் கவிதை எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை கண்காணிக்க வரலாறாகிப் போன நிகழ்வுகளின் மீதான கவிதைகளை சான்றாக்கலாம். அந்த வகையில் ஞானக்கூத்தனின்,*

*''மல்லார்ந்த மண்ணின் கர்ப்ப*
*வயிரெனத் தெரிந்தக் கீற்றுக் குடிசைகள்*
*சாம்பற் காடாய்ப் போயின*
*புகையோடு விடிந்த போதில்*
*ஊர்காரர் திரண்டு வந்தார்*
*குருவிகள் இவை என்றார்*

*குழந்தைகள் இவை என்றார்*
*இரவிலே பொசுக்கப்பட்ட*
*அனைத்துக்கும் அஸ்தி கண்டார்*
*நாகரிகம் ஒன்று நீங்க" (அரங்க மல்லிகா, பெண்ணின் வெளியும் இருப்பும், ப. 24)*

*என்ற கவிதையில் கீழவெண்மணியில் அரைப்படி நெல் கூலி உயர்வாகக் கேட்ட உழைப்பாளிகளைப் பண்ணையார் எறியூட்டிய நிகழ்வு கவிதையாகி இருக்கிறது. தலித் மக்கள் தங்கள் வாழ்க்கையின் ரணகளத்தில் கசியும் ரத்தத்தைப் படைப்பாக்கும் முயற்சியை தலித் அரசியலாக்கி வருகின்றனர். ஆனால், உயர் ஜாதியைச் சேர்ந்த ஒருவர் தலித் பிரச்சனையை எவ்வாறு அணுகுகிறார் என்பதற்கு இது ஒரு சான்று. தலித் மக்களை மனிதர்களாகக் கூட நினைக்காத நிலையை இக்கவிதை வெளிப்படுத்துகிறது. அழகிய பெரியவனின் கவிதை எரிக்கப்பட்ட தலித்துகளின் நெருப்பைச் சேகரித்து எரித்தவர்களை எரிக்க எழுப்பும் குரல், கலக அரசியலைத் தீவிரமாக்குகிறது.*

*"நெல் மணியைக்*
*கேட்டவர்க்கு*
*நெருப்பைத் தந்தது*
*வெண்மணி...*
*இந்தியா முழுவதும்*
*இதுதான் நடைமுறை*
*'இந்து' நெருப்புக்கு*
*இனிப்பது*
*நம் சதை*
*இதுவரை அம்முறை*
*இனிமேல் நம் முறை" (அழகிய பெரியவன், அரூபநஞ்சு, ப.63)*

*இவ்வாறு கலகக் குரலாக வெளிப்படுகிறது அழகிய பெரியவனின் இக்கவிதை. இன்றும் சாதிய ஒடுக்குதலுக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது கீழே வெண்மணி.*

*முடிவுரை*

*மலத்தை தின்ன வைப்பது, வாயிலே சிறுநீர் கழிப்பது, நிர்வாணப்படுத்தி கும்பலாக பாலியல் வன்முறை செய்வது என பல கொடுமைகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிராக நாளும் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமாக உள்ளது. கல்வி, வேலை வாய்ப்பிலும் உள்ளாட்சி முதல் சட்டமன்ற, நாடாளுமன்ற அமைப்புகளிலும் இட ஒதுக்கீடு போன்ற சீர்திருத்தங்களால் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு, கல்வி ஆகியவற்றில் படிப்படியான முன்னேற்றம் அடைவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும். உலகமயமாக்கல் என்ற புதிய பொருளாதாரத் தாக்கம் காரணமாக முதலாளித்துவத்திற்கு முந்தைய வடிவமான சாதிய முறையானது கட்டுடைத்து சிதறத் தொடங்கும் என்ற பழைய, புதிய சீர்திருத்தவாதிகளின் எதிர்பார்ப்பும், மதிப்பீடும் முற்றிலும் தவறாகி வருவதையே மேற்கண்ட சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. சுhதியக் கொடுமைகள் பற்றிய கடந்த 30 ஆண்டுகளின் புள்ளி விவரங்கள் சாதியக் கொடுமைகள் எல்லா வகையிலும் மேலும் மேலும் பெருகி வருவதையே உணர்த்துகின்றன. உலகமயமாக்கமும், வன்கொடுமை சட்டமும் அவற்றைக் குறைத்து விடவில்லை என்பதே நிதர்சன உண்மை.*

*சான்றெண் விளக்கங்கள்*


1. *முனைவர் கோ. கேசவன், தலித் அரசியல், ப. 5*
2. *டாக்டர் சு. சண்முக சுந்தரம், தலித்தியம், ப.138*
3. *மேலது, ப.13*
4. *மேலது, ப.135*
5. *அர்ஜூன் டாங்ளே, சுபமங்களா, ப.12*
6. *மதிமாறன், வே.மதிமாறன் பதில்கள், ப.29*


********* ********* ********** ********* ********* ********** ********** **********